மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யும் பணியை உடனடியாகத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) விழுப்புரம் மாவட்டம், செவலை செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்காதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. பொன்முடி அவர்கள்.

***முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், செவலை செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கடந்த 2 வருடங்களாக கரும்பு விவசாயிகளுக்கான கரும்பு நிலுவைத் தொகை சுமார் 73 கோடி ரூபாய் வழங்கப்படாமல் இருப்பது குறித்து கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்திருக்கிறீர்கள். அதற்கான பதில் அரசிடமிருந்து வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வேளாண் கரும்பு சாகுபடி செய்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிலுவைத் தொகை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட்டு, 2015-2016 ஆம் ஆண்டு அரவைப் பருவங்களுக்கு 349.49 கோடி ரூபாய் நிதி உதவி கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு ரூ.58.17 கோடி நிதி கோரப்பட்டுள்ளது. தமிழக அரசிடமிருந்து வழிவகைக் கடன் பெற்றவுடன், கரும்பு சாகுபடி செய்யும் வேளாண் பெருங்குடி மக்களுக்குண்டான நிலுவைத் தொகை வழங்குவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அவர்களுடைய ஆணையைப் பெற்று வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி இல்லை, அவ்வளவுதான். நீங்கள் கேட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறிவிட்டார்கள், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) துணைக் கேள்விக்கெல்லாம் அனுமதி இல்லை, உட்காருங்கள். தகவல் கோரல் என்ற முறையில் நீங்கள் தகவல் கேட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சிக் கொறடா பேசுகிறார். எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் பேசுங்கள்.

2. திருத்திய வரவு—செலவுத் திட்டம், 2016—2017, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016-2017 ஆம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 5 முறை ஒட்டன்சத்திரம் தொகுதியில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கி, எனது வெற்றிக்குப் பெரிதும் உதவியாக இருந்து, என்னை அரசியலில் உருவாக்கிய எங்களது குடும்பத் தலைவர், முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நமக்கு நாமே சுற்றுப் பயணத்தினை செப்டம்பர் 20 ஆம் நாள் அன்று ஆரம்பித்து, தமிழ்நாட்டிலுள்ள 234 தொகுதிகளிலும் பயணம் மேற்கொண்டு, அனைத்துத் தரப்பு மக்களின் பிரச்சினைகளையும் ஆராய்ந்து, சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவராகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராகவும், எங்களுக்கெல்லாம் அரசியல் வழிகாட்டியாகவும் திகழ்கின்ற கழகப் பொருளாளர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களது கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், ஆத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு அண்ணன்